நிலையான வைப்புக் கணக்கு				
கணக்கின் தன்மை	**வாடிக்கையாளருக்கான நன்மைகள்**	**ஆரம்ப வைப்புகளும் கட்டணங்களும்**	**தகுதிகள்**	**முக்கியமான விதிகளும் நிபந்தனைகளும்**
அதிக வட்டி வருமானத்தைப் பெற்றுக்கொள்ள குறிப்பிட்டவொரு காலப்பகுதிக்கு உங்கள் பணத்தை வைப்பிலிடுங்கள்.	**கவர்ச்சிகரமான வட்டி வீதம்** தற்போதுள்ள வட்டி வீதங்களை https://www.boc.lk/ratestariff#rupee-deposit-rates என்ற இணைப்பிற் சென்று பார்வையிடவும் மாதாந்தம் அல்லது முதிர்வின்போது வட்டியைப் பெற்றுக்கொள்ளும் வசதி உடனடி முற்பண வசதி வைப்பிலிடக்கூடிய காலப்பகுதிகள் - 1 மாதம் - 3 மாதங்கள் - 6 மாதங்கள் - 12 மாதங்கள் - 2 ஆண்டுகள் - 3 ஆண்டுகள் - 4 ஆண்டுகள் - 5 ஆண்டுகள்	**ஆரம்ப வைப்பு –** ஆகக் குறைந்தது 10,000 ரூபாய் **கணக்கைப் பராமரித்தலும் பிற கட்டணங்களும்** கட்டணத் தொகைகளை கீழ்க்காணும் இணைப்பில் பார்வையிடவும் https://www.boc.lk/personalbanking/investment-plans/investment-accounts/boc-relax **வரிகள் –** வட்டியானது இலங்கை அரசாங்கத்தால் மற்றும்/அல்லது கட்டுப்பாட்டு அதிகாரசபையால் அல்லது வங்கியால் காலத்துக்குக் காலம் தேவைப்படுத்தப்படும் முற்பண வருமான வரி, பிற வரிகள், அறவீடுகள் (ஏதும் இருந்தால்), சட்டரீதியான வரிகள் என்பவற்றுக்கு உட்பட்டவையாகும்.	இலங்கையை வதிவிடமாகக் கொண்ட 18 வயதுக்கு மேற்பட்ட எவரும் இக்கணக்கைத் திறக்கலாம். **கணக்கைத் திறப்பதற்கான நடைமுறைகள்** இலங்கை வங்கியின் நிலையான வைப்புக் கணக்கினைத் திறப்பதற்கான விண்ணப்ப படிவத்தைப் பூர்த்திசெய்து பின்வரும் ஆவணங்களுடன் எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கையளித்தல் வேண்டும். - தேசிய அடையாள அட்டை / தேசிய அடையாள அட்டை இலக்கம் உள்ள செல்லுபடியான கடவுச்சீட்டு - தேசிய அடையாள அட்டையிலுள்ள முகவரியும் தற்போது வசிக்கும் முகவரியும் வேறு வேறு எனின் முகவரியை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் - விண்ணப்பத்தில் வழங்கப்பட்டுள்ள முகவரியில் இருந்து கணக்குத் திறக்கப்படும் கிளை தொலை தூரத்தில் அமைந்திருந்தால் அக்கிளையில் கணக்குத் திறப்பதற்கான வலிதான காரணங்கள்.	நிலையான வைப்புக்கு எதிராக பண முற்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளும்போது குறித்த நிலையான வைப்பினை வாடிக்கயாளர் வங்கியின் உடமையாக ஒப்படைக்க வேண்டும். வைப்பினை உயர்த்தும் போது நிலையான வைப்புக் கணக்கின் மூலப் பிரதியை ஒப்படைக்க வேண்டும். சான்றிதழ் தொலையுமிடத்து அது குறித்து வங்கிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும் முதிர்வுக்கு முன்னர் பணம் மீளப்பெறப்பட்டால் 3 மாதங்களுக்கு மேல் பேணப்பட்ட வைப்புகளுக்கு வட்டி வழங்கப்படும். பொதுவான நிலையான வைப்புகளின் கீழ் பூர்த்தி செய்யப்பட்ட மாதங்களுக்கு பொருத்தமான வட்டி வீதத்திலிருந்து 4 வீத வட்டி கழிக்கப்பட்டே கணிக்கப்படும்.
காப்புறுதி வைப்பு / அங்கீகரிக்கப்படாத (தவறுதலான) கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடல் / செயற்படாக் கணக்குகள்				

- வைப்பாளர் ஒருவருக்கு அதிகபட்சம் 1,100,000 ரூபாய் வரையிலான நட்ட ஈட்டுக்கான பொருந்தக்கூடிய காப்புறுதியை செலுத்துவதன் மூலம் நாணயச் சபையினால் நடைமுறைப்படுத்தப்படும் இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் வைப்புப் பொறுப்புகள் காப்புறுதி செய்யப்பட்டுள்ளன.
- அங்கீகரிக்கப்படாத/தவறுதலான பரிவர்த்தனை ஒன்று கண்டறியப்பட்டால், அதனை உடனடியாக வங்கிக்கு அல்லது கணக்குப் பேணப்படும் கிளைக்குத் தெரிவிக்க வேண்டும்.
- ஒரு (01) வருட காலத்திற்கு பணம் மீளப்பெறல்/கொடுப்பனவு செயற்பாடுகள் எதுவுமின்றி கணக்கு செயற்படுத்தப்படாமல் இருந்தால், ஒரு வருட முடிவில் குறித்த கணக்கு 'செயலற்ற' கணக்காக மாறும்.
- இவ்வாறான கணக்குகள் 10 வருடங்களுக்கு மேலாக செயற்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் இல்லை என்றால், அந்த கணக்குகளில் உள்ள நிதி கைவிடப்பட்ட சொத்தாக கருதப்பட்டு இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்பப்படும்.

உங்களுடைய பின்னூட்டங்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளுங்கள்

- பின்வரும் வழிகள் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் பின்னூட்டங்களையும் முறைப்பாடுகளையும் பகிர்ந்து கொள்ளலாம்;
- எங்கள் வாடிக்கையாளர் அனுபவ முகமைத்துவப் பிரிவு மூலம் உங்கள் பாராட்டுகள் / முறைப்பாடுகள் என்பவற்றை நீங்கள் பதிவு செய்யலாம். தானியங்கு அமைப்பு மூலம் உங்கள் கோரிக்கைகள் முன்னுரிமையுடன் கவனிக்கப்படும்.

தொலைபேசி: +94 11 220 4750 / +94 11 243 5814 தொலைநகல்: +94 11 243 5815 மின்னஞ்சல்: **bocexmgt@boc.lk** இணையத்தளம்: https://www.boc.lk

அஞ்சல்: வாடிக்கையாளர் அனுபவ முகாமையாளர், 22ஆவது மாடி, இலங்கை வங்கிக் கோபுரம், இலங்கை வங்கிச் சதுக்கம், இல. 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.

எங்கள் கிளைகள், சேவைப் பிரிவு அல்லது அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள், எங்கள் கணக்குகள் அல்லது சேவைகள் தொடர்பான ஏதேனும் கருத்துகள்/சந்தேகங்கள் இருப்பின் எங்கள் கிளைகளை நாடலாம் அல்லது 1975 என்ற எண்ணின் ஊடாக அழைப்பு மையத்தைத் தொடர்பு கொள்ளலாம்.